பெ. பூபதி பெரியசாமி சிறுகதையில் வேளாண் மரபு

ஹ. சாமிதேவி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம்

முனைவர் எ . சுசான் மரி நெப்போலியன்
இணைப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம்
DOI: https://doi.org/10.5281/zenodo.19220474

முன்னுரை

இலக்கியம்என்பதுகாலத்தினைகாட்டும் கண்ணாடியாகும். அக்காலம் முதல் இக்காலம் வரை உள்ள அனைத்து நிகழ்வுகளையும் அறிந்து கொள்ள தமிழ் இலக்கியங்கள் பயன்படுகின்றன. அவ்வகையில் நவீன இக்கால இலக்கியங்களான சிறுகதையும் ஒன்று. சிறுகதைகளின் மூலம் மனிதன் வாழ்வில் நிகழ்ந்த பல்வேறு வாழ்க்கை அனுபவங்களையும், பண்பாட்டையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் எளிமையாகவும், சுருக்கமாகவும் மக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் கதைகள் அமைகின்றன.

அவ்வகையில் கலைமாமணி பெ. பூபதி பெரியசாமி அவர்கள் தன் வாழ்வில் பார்த்த, சந்தித்த பல நிகழ்வுகளை மையமாக கொண்டு தொன்னுற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை படைத்து அவற்றினை ஐந்து தொகுதிகளாக வெளியிட்டும் உள்ளார்.

அவர் எழுதிய பல சிறுகதைகள் வார, மாத இதழ்களில் வெளிவந்து சிறந்த சிறுகதைகளுக்கான பரிசும் பல்வேறு விருதும் பெற்றுள்ளன. அவர் எழுதிய சிறுகதை கானல் நீர் தொகுதிகளில் என்னும் சிறுகதையின் மூலம் வெளிப்படும் விவசாயத்தின் மேன்மையை ஆய்வதாக இவ்வாய்வு கட்டுரை அமைந்துள்ளது.

வேளாண்மை விளக்கம்

வேளாண்மை என்பது மனித குலத்தின் அடிப்படைத் தேவையான உணவு, உடை மற்றும் இருப்பிடத்திற்கு தேவையான மூலப்பொருட்களை வழங்கும் முதன்மைத் தொழிலாகும். இது உலக பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழ்வதுடன் வேலை வாய்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக நிலைத்தன்மைக்கு அச்சாணியாக உள்ளது.

உழவின் உழைத்திட உலகம் வளரும்,
உண்டி நிறைய ஒவ்வோர் வீடும்,
நிலமே செல்வம், நெற்பயிர் நம்பிக்கை,
நீரின்று அமையாது வாழ்விது[1]

(வையாபுரிப்பள்ளு)

என்ற பாடல் மூலம் சமூக செழிப்பின் மூலாதாரம் வேளாண்மையாக இருந்ததனை அறிய முடிகிறது.

தமிழரின வேளாண்மை

தமிழரின் சிந்தனை தெளிவையும், தமிழரின் நுட்பத்தையும் அறிவித்துக் கொண்டிருக்கும் சொல் வேளாண்மை. வேளாண் என்ற சொல் தொல்காப்பியத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்[2]

(105 தொ. பொ)

என்ற வரியில் உள்ள வேளாண் என்ற சொல்லுக்கு உழவர் மற்றும் அவர்களின்

சமூக பங்கு குறித்து தொல்காப்பியர் கூறிச்செல்கிறார்.

நிலவியல் மற்றும் மருத நில வாழ்க்கை தொல்காப்பியர் தமிழர் நிலங்களை ஐந்திணையாக பகுத்து கூறுகிறது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை இவற்றில் மருத நிலம் விவசாயத்திற்கு ஏற்ற செழிப்பான நிலமாக கருதப்பட்டது. நெல், பயிர், வயல், குளம், ஆறு, ஏரி ஆகியவை மருதநில வாழ்வின் அடையாளமாக இருந்தன. இதனை

நடுவன் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே[3]

(தொ. பொ)

ஆதி தமிழர்கள் விவசாயம் என்பது மண் மனிதனுக்கு செய்யும் உபகாரம், உதவி, கொடை, என்றே கருதி இருக்க வேண்டும். வேளாண்மை என்பதற்கு நிகரான ஆங்கிலச் சொல்லான **39**; Agriculture 39; என்பதற்கு நிலைத்தப் பயன்படுத்துதல் என்ற பொருளைத் தருகிறன. மேலும் உழவு, விவசாயம், பயிர்ச்செய்கை, கமம் மற்றும் பயிரிடுதல் ஆகியவையும் வேளாண்மையை குறிக்கும் சொல்லாக பயன்படுத்தப்படுகின்றன.

உழவு

உலகத்தவர்கள் பல தொழில் செய்தாலும் இறுதியில் உணவின் தேவை பொருட்டு உழவையே எதிர்பார்க்கின்றன நிலை ஏற்படுகின்றன. உலகிற்கு உணவளிக்கும் மிகச் சிறந்த தொழிலாக விவசாயம் போற்றப் படுகின்றன.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்[4]

(குறள்-1033)

என்ற வள்ளுவர் குறளின் மூலம் அறிய முடிகிறது. மேலும் பாரதியார் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாடியுள்ளார். அமுதத்தமிழ் தந்த ஔவையும் உழவுத் தொழிலின் உயர்வை ஆற்றங்கரையில் மரமும் அரசு அறிய

வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே - ஏற்றம்
உழுதுஉண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை
பழுதுஉண்டு வேறோர் பணிக்கு[5]

(நல்வழி- 6)

என்று ஔவை சிறப்பாக கூறியிருக்கிறார்.

உழவரின் சிறப்பு

உழவுத் தொழிலை செய்வோன் உழவர். இவர்கள் இவ்வுலகத்தை தாங்கும் அச்சாணியாகவும் திகழ்கின்றனர். இதனை

உழவார் உலகத்தார்க்கும் ஆணி
அஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து[6]

(குறள்-1032)

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். பழந்தமிழகம் ஐவகையாக பகுக்கப்பட்டதனை

தொல்காப்பிய காலத்துக்கு முன்பே இருந்தமையை முற்படக்கிளந்த எழுதிணை என்ப [7] (தொ. பொ) என்று அவர் கூறுவதன் மூலம் அறியலாம். மருத நிலம் என்பது வயலும்வயல்சார்ந்தபகுதியாகும். இப்பகுதி வேளாண்மை செய்வதற்கு ஏற்ற பகுதி என்ற உணர்த்தினைப் பழந்தமிழர்கள் பொருந்தினர். உழவுத் தொழிலில் ஈடுபட்ட ஆடவர்கள், உழவர்கள், பெண்டிர்களை உழத்தியர் என்று அறியப்பட்டனர்.

உழவுத் தொழில் தமிழர் பண்பாட்டின்
மகுடம்
வரப்புயர நீர் உயரும்
நீர் உயர்ந்தால் நெல் உயரும்
நெல் உயர்ந்தால் குடி உயரும்
குடி உயர கோனி உயர்வான்[8]

(சி.ப.மூ-44)

வரிகளானது ஒரு தேசத்தின் பெருமை என்பது அங்கே உள்ள உழுது விதை பருவங்களின் கையில் உள்ளது என்று கூறி செல்கின்றது. பண்டைய தமிழர் வாழ்வியலில் உழவுத் தொழில் ஒரு தனி அடையாளமாக உள்ளது. அந்த மக்களின் அழகான வாழ்வியலில் செம்புல பெயர் நீர்[9] (கு.தொ.10) மண்ணின் வளம் அறிந்து

பயிரிட்ட தமிழர் வாழ்வியல் இங்கே வெளிப்படுகின்றன.

உழவுத் தொழிலின் முக்கியத்துவம்

உழவு என்பது வெறும் தொழில் மட்டும் அல்லாமல் இவ்வுலகில் வாழ்கின்ற அனைத்து மக்களின் உயிர் நாடியாகவும் உள்ளது. இதனை சங்கம் மருவிய சங்க இலக்கியங்களில் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே[10] (11-புறம்) என்ற பாடல் மூலம் உணவளிக்கும் விவசாய குடிமக்களின் பெருமை பற்றி கூறுகிறது. இந்த உலகில் மக்கள் பசி, பட்டினி என்பது இல்லாமல் மக்கள் அனைவரும் மகிழ்வாக வாழ வேண்டும் என்றால் உழவுத் தொழில் மேன்மை அடைய வேண்டும் என்பதில் அன்றைய மன்னர்கள் ஆர்வமாய் இருந்தனர்.

பெ. பூபதி பெரியசாமி படைப்பில் வேளாண்மை கலைமாமணி பூபதி பெரியசாமி படைப்பில் உழவு என்னும் சிறுகதைகளில் வேளாண்மை நமது உயிர் நாடி என்றும் அதனை எதிர் வரும் சன்னதிகளுக்கு எடுத்து கூறும் விதமாகவும் அமைந்துள்ளன.

பூபதி பெரியசாமி சிறுகதையில் வெளிப்படும் வேளாண் மரபு இவர் எழுதிய உழவு என்னும் சிறுகதையில் வேளாண் தொழில் மகத்தான தொழில் என்பதனை எடுத்துக் கூறுவதாக உள்ளன.

தந்தையின் கடமை

பாரதி நடேசனை சந்திக்கும் வேலையில் பாரதியை விசாரிக்கும் நடேசன், நான் ஒரு விவசாய குடும்பத்தினை சார்ந்தவன் என் அப்பா நிலத்தில் வந்த வருமானத்தை வச்சி கஷ்டப்பட்டு ஆசிரியர் படிப்புக்கு படிக்க வச்சார். அவர் பட்ட கஷ்டம் வீண்போகவில்லை. பழனியில் இப்ப ஆசிரியர் வேலை கிடைத்து இருக்கு (கா.நீ 30) இதனை

ஈன்று புறம் தருதல்
என் தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல்
தந்தைக்கு கடனே[11](புறம் 312)

என்ற பாடல் மூலம் தன் மகனை சான்றோனாக்கியதை அறிய முடிகிறது. மேலும், வள்ளுவர் இதனை

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் சொல் என்னு சொல்[12]
(குறள் -70)

என்று கூறுகிறார்.

பாரதியும் தாயும்

பாரதிக்கு ஆசிரியர் வேலை கிடைத்ததனை பொருட்டு பாரதி தன் பெற்றோரை நிலத்தினை விற்று விட்டு தன்னோடு வரும்படி அழைக்கின்றான். டேய்

என்ன பேசுற நீ..? வேலைன்னு ஒன்று உறுயாயிட்ட உடனே உனக்கு விவசாயம்

கேவலாமாப் போச்சா.? பசின்னு ஒன்னு இருக்கறவரைக்கும் உணவுன்னு ஒன்னு

வேணும் தம்பி. உணவுன்னு ஒன்னு வேணும்னா, விவசாயம்னு ஒன்னு இருந்தே தீரும்.

ஏண்டா..! இது போலவே ஒவ்வொருத்தரும் விளையற நிலத்தையெல்லாம் பிளாட் போட்டு வித்துட்டா... எதிர்கால சந்ததி பென்ன கல்லையும், மண்ணையுமா சாய்ச்சிக்குடிப்பாங்க....[13](கா.நீ 32)

படிப்பிற்கு ஏற்ற நல்ல வேலை கிடைத்தாலும் விவசாயத்தினை கைவிடக் கூடாது என்பதனை கூறும் விதமாக உள்ளன. இதனை

உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே[14] (புறம்.பா18)

என்ற புறநானூறு மூலம் உணவின் மகத்துவத்தையும் உழவின் அவசியத்தையும் எடுத்துரைப்பதை காண முடிகிறது.

நடேசனனும் பாரதியும்

பாரதிக்கு ஆசிரியர் வேலை கிடைத்ததன் பொருட்டு சமயபுரத்து மாரியம்மனை தரிசனம் செய்து விட்டு வேலையில் சேரலாம் எண்ணிய பாரதியை நடேசன் அவர்கள் சந்திக்கிறார். பாரதியின் பண்பான பேச்சால் நடேசனுக்கு பாரதியின் மீது அன்பு கொண்டு பழனிக்கு போகும் வழியில் தன் வீடு உள்ளது. வந்து உணவருந்து விட்டு போகலாம் என்று அழைக்கிறார். பாரதியும் நடேசனுடன் செல்லும் வழியில் பல இயற்கை மிகு காட்சிகளையும், அழகையும் காண்பது பாரதிக்கு மன மகிழ்ச்சி அளிக்கின்றன. நடேசன் அழகிய தோட்டத்திற்கு நடுவே ஒரு சிறிய வீட்டிற்கு பாரதியை அழைத்துச் செல்கிறார். நடேசன் பாரதியை தன் மனைவியிடம் அறிமுக படுத்திவிட்டு உணவு அருந்த வாழை இலையை எடுத்து வர தோட்டத்திற்கு செல்கிறார்.

நடேசன் வீட்டில் இருந்து வெகுதொலைவில் உச்சி வெயிலில் ஒருவர் கோவணத்துடன் இறைக்கும் மோட்டாரில் இருந்து பாயும் தண்ணீரை மண்வெட்டியால் நிலத்திற்கு பாய்ச்சி கொண்டிருப்பதை பார்த்து ஆச்சரியப்பட்டான் பாரதி.

பாரதியும் நடேசன் மனைவி அம்புஜமும்

அம்புஜம் பாரதிக்கு உணவு அளிக்கும் போது இந்த காலத்திலும் ஐயா நிலத்த வச்சிகிட்டு கஷ்டபடுகிறார். இதில் என்ன பெருசா லாபம் கிடைக்கும் என்று கேட்ட பாரதிக்கு சுத்து வட்டாரத்துல எல்லாம் நிலத்தை பிரித்து பிளாட் போட்டுட்டாங்க. நாங்க அந்த தப்ப பண்ண விவசாயம் எங்களுக்கு உசுரு. பணம் மட்டும் வாழ்க்கையின்னு நினைச்சி பலர் நிம்மதியை இழந்துட்டாங்க. எங்களுக்கு நிலமும் விவசாயமும் நிம்மதியை தருது[15] (கா.நீ.36) என்று வாழ்க்கையின் தத்துவத்தினை எதார்த்தமாய் கூறிய பதில் பாரதிக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

பாரதியின் மனமாற்றம்

பாரதி நடேசனிடம் இருந்து விடை பெற்று பணியில் சேர செல்கிறான்.

தலைமையாசிரியர் அறைக்கு சென்ற பாரதி நடேச.சுப்பிரமணியம் தலைமை ஆசிரியர்..!! என்ற பெயர் பலகையை பார்த்து அவர் நடேசனின் மகன் என்பதை உணர்ந்து கால அட்டவணையை வாங்கி கொண்டு வகுப்பிற்கு செல்லும் முன் தன் அம்மாவிற்கு போன் செய்து நான் வேலையில் சேர்ந்து விட்டேன். இனி வார விடுமுறை சனி, ஞாயிறு இரண்டு நாளும் ஊருக்கு வருகிறேன். அப்பாவிடம் சொல்லி நிலத்தை எல்லாம் சரி செய்ய சொல்லுங்க. ஏதாவது நிலம் இருந்தாலும் வாங்க செ ால்லுங்க அடுத்த வருடம் அறுவடையை அசத்தலாம். (கா.நீ 37) பணியின் முதல் நாள் வகுப்பிற்கு செல்லும் போது அவன் பார்வையில் சுழன்று ஏர்ப் பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை[16]

என்ற குறள் பட்டது.

இவற்றின் விளக்கத்தினை மாணவர்களுக்கு கூறியதன் மூலம் இப்புவியல் பிறந்ததன் பயனை அடைத்து விட்ட மகிழ்ச்சியில் பாரதி நிம்மதியடைகிறான்.

முடிவுரை

நெல்லும் கழனியும் செழித்து விளையும் நிலத்தின் வளம் உணவின் அடிப்படை உழவாகும் என்பதனை

கழனி நெல்லின் கவளம் கமழும் நாடு[16]
(ப.பா)

என்ற பாடல் அறிய முடிகிறது. வேளாண்மை என்பது மனித வாழ்வின் முதுகெலும்பாக விளக்கும் அடிப்படைத் தொழிலாகும். உணவு பாதுகாப்பு பொருளாதார வளர்ச்சி சுற்றுச்சூழல் சமநிலை கிராமப்புற முன்னேற்றம் ஆகிய அனைத்திற்கும் அடித்தளமாக திகழ்கின்றன. தமிழரின் வாழ்க்கை முறையோடு பின்னிப்

பிணைந்த தொழில். சங்க இலக்கியம், திருக்குறள், பள்ளு இலக்கியம் போன்ற நூல்களில் வேளாண் சிறப்பினைப் பற்றி அறிய முடிகிறது. உழவு என்னும் இச்சிறு கதையில் மூலம் வேளாண்மை வெறும் தொழிலாக அல்லாமல் வாழ்வின் உயிர் நாடியாக ஒவ்வொருவரும் கருதி பாதுகாத்து வளர்த்திடுதல் நம் கடமையாகும் என்பதனை இக்கதையின் வாயிலாக அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. வையாபுரி பிள்ளை பள்ளு
2. தொ. பொ -185
3. தொ. பொ -202
4. குறள் -1033
5. நல்வழி-பா .6
6. குறள் -1032
7. தொல் . பொ -212
8. சிறுபஞ்சமூலம்-44
9. குறுந்தொகை .பா 10
10. புறநானூறு 11
11. புறநானூறு 312
12. திருக்குறள் 70
13. கானல் நீர் ப.32
14. புறநானூறு பா.32
15. கானல் நீர் ப.36
16. திருக்குறள் -1031
17. பரிபாடல் .பா 6

துணை நின்ற நூல்கள்

1. கானல் நீர்-பூபதி பெரியசாமி -காவியா பதிப்பகம், 2022
2. திருக்குறள்-மாணவர் பதிப்பகம் 2024, சென்னை
3. சிறுபஞ்சமூலம்-மாணவர் பதிப்பகம், 2014, சென்னை
4. நல்வழி-ஔவையார், சுரா புக்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 2005
5. தொல்காப்பியம் - பாரி நிலையம் 184 பிராட் வே சென்னை -2007
6. சங்க இலக்கியங்கள்-வர்தமான் பதிப்பகம் சென்னை, 2001